
# 2010

# விரை



TRAINING COURSE FOR NON GRADUATE UNTRAINED TEACHERS 2010-2012

## Batticaloa National College of Education

## மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரை

TRAINING COURSE FOR NON GRADUATE UNTRAINED TEACHERS 2010 - 2012

## Batticaloa National College of Education

## மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வானம் அழந்த தனைத்தும் அழந்திடும்
வன மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்கக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : விரை |
| வெளியீடு | : விரை மலர்க்குழு<br>மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி,<br>தாழங்குடா |
| பதிப்பும் வெளியீடும் | : 2010 |
| பிரதிகள் | : 120 |
| பக்கங்கள் | : |
| அட்டைப்பட கணணி வடிவமைப்பு | : எம்.ஐ.எம். முஸம்மில் |
| நூல் கணணி வடிவமைப்பு | : எம்.ஐ.எம். முஸம்மில் |
| அச்சுப் பதிப்பு | : STC அச்சகம்<br>சம்மாந்துறை.<br>0772094889,0673678563 |
| பதிப்புரிமை | : மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி<br>தாழங்குடா. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பணிப்பாளரின் செய்தி

ஒரு சமூகத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதில் ஆசிரியர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். நாளைய சமூகத்தின் நாயகர்களான இன்றைய மாணவர்களை நவீன சமூகத்திற்குப் பொருத்தமான தலைவர்களாக உருவாக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்ததாக இருக்கின்றது.

ஆசிரியர் என்பவர் வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியேயும் பல்வேறு பிரச்சினைகள், சவால்களை எதிர்கொள்ள வேண்டியவராக இருக்கின்றார். எனவே அவற்றை வெற்றிகரமாக எதிர்நோக்கி தேசிய கல்விக் குறிக்கோள்களை எய்தக்கூடிய வகையில் மாணவர்களை வழி நடாத்திச் செல்லும் பணியைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு ஆசிரியர்கள் திறன் வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

எனவே எமது பாடசாலைக் கட்டமைப்பில் உள்ள ஆசிரியர்கள் அனைவரையும் வகுப்பறைக்குப் பொருத்தமானவர்களாக மாற்றியமைக்கும் நோக்கில் தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவன அபிவிருத்தித் துறையானது கல்வியமைச்சின் அனுசரணையுடன் 7030 ஆசிரியர்களின் ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கற்கை நெறியொன்றினை 42 பிராந்திய நிலையங்களினூடாக நடாத்தி வருகின்றது.

அந்த வகையில் வகுப்பறைக்கு அத்தியாவசியமான வாண்மை விருத்திப் பாடங்களைக் கற்று அறிவு, திறன், மனப்பாங்கு, வாழ்க்கைப் பழக்க வழக்கங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொண்ட ஆசிரியர்கள் தமது ஆக்கத்திறன்களை வெளிப்படுத்துமுகமாக வெளியிடப்படுகின்ற இந்த சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு ஆசிரியர் ஆக்கத்திறன் வாய்ந்தவராக இருக்கும் போது தான் கற்பித்தல் பூரணத்துவமடைகின்றது. " மாணவர்கள் வெற்றுப்பாத்திரங்களல்ல" அவர்கள் ஏதேனும் திறமையைக் கொண்டவர்களாகவே பாடசாலையில் காலடி எடுத்து வைக்கின்றனர். எனவே அவர்களது திறமைகள் கண்டறியப்பட்டு செப்பனிடப்பட வேண்டும் என்பது புரூனர், விகொட்ஸ்கி போன்ற கட்டுருவாக்கக் கொள்கையாளர்களின் கருத்தாகும். மாற்றமடைந்து கொண்டு செல்கின்ற மாணவர்களது தேவைகள், திறன்கள் என்பவற்றை இனங்கண்டு ஆக்கத்திறனுள்ள சமுதாயமாக அவர்களை உருவாக்குதவற்குரிய ஆற்றலும் திறனும் ஆக்கத்திறனுள்ள ஆசிரியர்களாலேயே சாத்தியப்படும்.

மேலும் ஆசிரிய மாணவர்களின் மறைந்து கிடக்கின்ற ஆற்றல்களை வெளிப்படுத்தவதற்குக் களமாய் அமைகின்றது இந்த சஞ்சிகை. உள்ளத்து உணர்வுகளை நேரான முறையில் வெளிப்படுத்தி தாம் பெற்ற கல்வியின் பயனை ஏனையோரும் அனுபவிக்கக் கூடிய வகையில் தரமான ஆக்கங்களை வடிவமைத்துள்ள எனது அன்புக்கினிய ஆசிரிய மாணவர்களுக்கும் அவர்களை வழிநடாத்திய இணைப்பாளர்கள் விரிவுரையாளர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இக்கற்கைநெறி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட தேர்ச்சிகளுடன் நாட்டின் எதிர்காலச் செல்வங்களின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத்திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து நவீன உலகிற்கேற்ற வகையில் அவர்களை உருவாக்கக் கூடியவாறு பயனுள்ள கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

மேலும் இக்கன்னி முயற்சி பூரண வெற்றிபெற்று இவ்வாறான பணிகள் மேன்மேலும் தொடர வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

திருமதி விலானி அமரசிங்ஹ
பணிப்பாளர்
நிறுவன அபிவிருத்தித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இணைப்பாளர்**

**திரு S. பாக்கியராஜா அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

நல்ல பயிற்சியினூடாகவே நல்ல தொழில் வாண்மையை பெருக்க முடியும். நல்ல பயிற்சியைப் பெற்ற சாரதியின் வரலாற்றில் விபத்துக்கு வழியில்லை. பயிற்சியினூடாக தொழில் சிறக்கிறது. அவ்வாறே இன்றைய உலகில் ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டோர் தொகை அதிகம். இலங்கையைத் தவிர்ந்த ஏனைய நாடுகளில் ஆசிரியர்கள் பயிற்சியின்றி வகுப்பறையில் நுழைவது மிகவும் குறைவு. ஆனால் நமது நாட்டில் ஆசிரியர் பயிற்சி பெறாமல் சர்வசாதாரணமாக வகுப்பினுள் சென்று சிறார்களுக்கு பாடம் புகட்டுதல் என்பது நீண்ட காலமாக நிலவி வரும் செயலாகும்.

நாடு கல்வி வளர்ச்சியில் முன்னணி வகிக்கின்றது என்று புள்ளி விபரங்கள் தந்தாலும் வாழ்க்கைக்கு கல்வி என்ற மகுடத்துக்கு இன்னும் நாம் தயாராக இல்லை என்பது கசப்பானதே. காரணம் ஆசிரியர் சான்றிதழின்றி வகுப்பறையில் ஆசிரியர்கள் சென்று பணிகளை ஏற்பதே காரணம். இதனால் வளர்ந்து வரும் சமூகம் வழியின்றி சிக்கித் திகைக்கின்றது. கல்வியை வெறுக்கின்றது. அரசினதும் சமூகத்தினதும் கட்டாயத்தின் பேரில் பாடசாலைகளில் சிறார்கள் படிக்க வேண்டியவர்களாகின்றனர்.

இந்நிலையில் கல்வியமைச்சின் காலம் கடந்த ஞானம் ஒன்றால் ஆசிரியர்களைப் பயிற்சியளிக்கும் துரித திட்டத்தின் கீழ் பட்டதாரிகள் மற்றும் சாதாரண பயிற்சியிலுள்ள அனைத்து ஆசிரியர்களையும் பயிற்சியளித்து பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டும் என்ற திட்டத்தின் கீழ் வேகமாகச் செயற்படும் இப்போக்கினை கல்விச் சமூகம் பெரிதும் வரவேற்கின்றது. (அதற்காக பல்கலைக் கழகங்களோடு தேசியக் கல்வி நிறுவனம் இணைந்து செயற்படும் பணி வரவேற்கத்தக்கது) இதற்காக தொண்டர் ஆசிரியர்களாக பல காலமாகப் பணியாற்றிய சுமார் ஏழாயிரம் ஆசிரியர்களுக்காய் சனி, ஞாயிறு தினங்களில் 47 நாடாளாவிய நிலயங்களில் நடைபெறும் ஆசிரியர் பயிற்சியினூடாக ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வரும் இவ்வேளை கிழக்கிலங்கை பாடசாலைகளில் ஆசிரியர்களைக் கடமையாற்றும் சமார் 175 ஆசிரியர்களுக்கு மேல் ஆசிரியர் பயிற்சி வழங்கும் மட்டக்களப்பபு தேசிய க்லவியியற் கல்லூரி இவ்வுயர் பணியில் தம்மையும் ஈடுபடத்தியுள்ளமை அதன் உயரிய இலக்கிற்கு மற்றுமொரு சிறந்த எடுத்துக் காட்டாகும். இப்பணியில் ஈடபட்டு நல்ல வழிகாட்டல்களை வழங்கும் விரிவுரையாளர் சமூகத்தைப் பாராட்ட வேண்டும். அதற்காக நல்ல பாடத்திட்டத்தினை தயார் செய்து வழங்கி வழிகாட்டும் தேசிய கல்வி நிறுவக அதிகாரிகள், கல்வியமைச்சு ஆசிரிய கற்கைத் துறையினரை ஆசிரிய சமூகம் என்றும் நன்றி கூறும். வளர்க ஆசிரிய சிறந்த பணி.

**எஸ். பாக்கியராசா**
(பீடாதிபதி)
இணைப்பாளர் - மட்டக்களப்பு
தேசிய கல்வியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூல் அறிமுகம்

**'விரை'** எனும் சஞ்சிகை பலவிதமான வாசங்களைக் கொண்ட ஒரு சிறிய ஆக்கம். இச் சஞ்சிகையில் பல்சுவை ஆக்கங்ளும், சிறந்த சிந்தனைத் துளிகள் பலவும் அலங்கரிக்கின்றன. விஷேடமாக விரிவுரையாளர்கள் செதுக்கிய சிந்தனைச் சிற்பங்கள் பல இவ்வாக்கத்தில் காணப்படுவது யாம் பெற்ற பெரும் பேறாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுப் பணிகளில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு ஆசிரியரும் பயிற்றுவிக்கப்பட்டவராக இருப்பது அவசியமாகும். தேசிய கல்வி நிறுவகத்தினாலும், கல்வி அமைச்சினாலும் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பயிற்றப்பட்ட ஆசிரியர்களை பயிற்றுவித்து ஒவ்வொரு ஆசிரியரும் வாண்மைத்துவம் மிக்கவராக மிளிர வேண்டும் எனும் நோக்கில் நடாத்தப்படும் இப்பாடநெறியானது ஒரு வருட பூர்த்தியடைவதையிட்டு இச்சிறிய இதழை வெளியிடுகின்றோம்.

மேலும் இச்சஞ்சகையை வெளியிடுதற்கு ஒத்துழைப்புக்களையும், ஆலோசனைகளையும் வழங்கிய மதிப்புக்குரிய இணைப்பாளரும், மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதியுமான திரு. எஸ். பாக்கியராஜா சேர் அவர்களுக்கும், சிறந்த ஆக்கங்களை தந்துதவிய மதிப்புக்குரிய விரிவுரையாளர்களுக்கும், சக ஆசிரிய பயிலுனர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். மனிதன் மறதிக்கும், தவறுக்கும் மத்தியில் படைக்கப்பட்டவன் என்ற வகையில் இவ்வாக்கத்தில் பிழைகள் காணப்படின் மன்னித்து மேலும் இதைவிட சிறந்த சஞ்சிகைகள் இனிவரும் காலங்களில் வெளிவருவதற்கு உங்கள் ஆலோசனைகளையும், ஒத்துழைப்புக்களையும் எதிர்பார்க்கின்றேன்.

**எம்.ஐ.எம். முஸம்மில்**
இதழ் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LECTURERS

| | |
|---|---|
| 01. Mr. S. Packiyarajah | Co - ordinator<br>President, B.A (Hons), PGDE, M.A, SLTES 2 - I |
| 02. Mr. K. Thavapragasam | B.Sc (Hons) PGDE SLTES 2 -II |
| 03. Mrs. T. Juvaneswary | B.Sc (Hons) PGDE (Merit) SLTES 2 -II |
| 04. Mr. T. Thurairajah | B.A PGDE (Merit) M.A SLTES 2 -II |
| 05. Mr. Jeyakumar | B.Sc (Hons) PGDE M.Sc SLTES 2 -III |
| 06. Mrs. P. Antony | B.A (Hons) PGDE M.A SLTES 2 -III |
| 07. Mr. Ananatharajah | B.A (Hons) PGDE (Dis) M.ED |
| 08. Mr. P. Satkunanathan | B.Sc (Hons) Agri, PGDE M.E.D |
| 09. Mr. Nawas | M.E.D (Canadas) B.Sc (Hons) PGDE PGIT, DRM(Ind) |
| 10. Mr. Aliyar Farook | B.A (Hons) PGDE Mate (T.Ed) C.E.P (Ireland) |
| 11. Mr.V. Thaiyib | B.A (Hons) PGDE M.Ed |
| Other Staff | |
| Mr. P. Mahendiran | P. Management Asst. |
| Mr. A. Sivapalan | Library Asst. |
| Mr. K. Pakkiyalingam | Labour |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விரை' வெளியீட்டுப் பணியில் பங்கேற்றோர்

ஜனாப். எம்.ஐ.எம். முஸம்மில்

திரு. கு. பிரதாபன்

திருமதி. எஸ். மோகனதாஸ்

ஜனாப். எஸ். எம் பாயிஸ்

திரு. எஸ். லோகிதராஜன்

திரு. எஸ்.எம். மோகனதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆர்வங்களும் மனப்பான்மைகளும்

தனி மனிதனின் விருப்பங்களையும், ஆசைகளையும் நிறைவேற்றுவதற்காக அவன் பல்வேறுவிதமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றான். அவை அவனுக்குள் ஆர்வத்தைக் காட்டுகிறது. ஆர்வங்கள் மனிதனை மனிதனை ஒரு குறிப்பிட்ட செயலின்பால் ஈடுபடுத்தக்கூடிய உளச்சார்பு நிலையாகும். இது அகம்சார் ஆ்வங்கள் புறம்சார் ஆர்வங்கள் என இரண்டு வகைப்படும். உள்ளார்ந்த ஆர்வம் ஒருவரிடம் ஏற்படும்பொழுது. அதில்தான் மட்டுமே மனநிறைவு பெறுபவனாக இருக்கின்றான். புறசார் ஆர்வத்தினால் அவனைச்சார்ந்த ஏனையவர்கள் புகழடைகின்றார்கள்.

ஒருவரிடம் ஆர்வம் ஏற்பட காரணிகளாக அமைபவை உடல் வளர்ச்சி, நுண்ணறிவு, சூழிநிலை சமூகப் பொருளாதார தகுதிகள் போன்றவை எனலாம். இவை சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றமடையலாம். இளைய பருவம் வரும் பொழுது குழந்தைப்பருவத்து ஆர்வங்கள் மறைந்து சமூகவளர்ச்சிக்கு சார்ந்த ஆர்வங்கள் ஒருவனிடம் தோன்றிவரும். தொடக்கத்தில் தனியாகக் காட்டத் தொடங்குபவர்கள் 'ஆல்பியன் சாமல்' என்பவர் கூறும்பொழுது ''மனிதனுக்கு இன்றியமையாத சில ஆர்வங்கள் கூடி வாழ்தல், அறிவு, அழகு, நன்னடத்தை போன்றவையாகும். இவற்றை முழுமையாக அடைவதற்கு அவன் சமூகத்தை அமைத்துக் கொள்கிறான்." என்று கூறுகிறார். ஒத்த ஆர்வங்கள் இருவரிடையே போட்டியைத் தோற்றுவிக்கும். ஆனால் பொதுவான ஆர்வங்கள் முயற்சிக்கு வழிவகுக்கும் ஆனால்போட்டியற்ற ஒத்த ஆர்வங்களே பொதுவான ஆர்வங்களாக வளர்ந்து சமூக வளர்ச்சிக்குப் பயனளிக்கின்றன.

ஆர்வங்களுடன் மனப்பான்மைகள் எனும் பொழுது 'நியூமோம்பு' கூறுவது போல் 'நோக்கங்கள் உண்டாவற்கான ஆயத்தநிலை என்கிறார். ஒரு தனி மனிதன் தன் சூழ்நிலையிலுள்ள பொருள், மக்கள் இடங்கள் அகியவற்றின்பால் நேரிடையாகவே எதிரிடையாகவோ செயல்புரிய வைக்கின்ற ஊக்கிகள்,புலன்காட்சிகள், சிந்தனைகள், மனவெழுச்சிகள் ஆகியவை ஒருங்கேயமைந்த உளம்சார் ஆயத்தநிலையே மனப்பான்மை என ஆல்போட்டு கூறுகிறார்.

மனப்பாங்குகள் தனிமனிதனின் அக உணர்வுநிலையினைச் சார்ந்தவையாக இருக்கும். இது அவனுடைய பெரும்பாலான நடத்தைகளில் செல்வாக்குடையவனவாக இருக்கின்றன. சில சூழ்நிலையின் காரணத்தால் தனி மனிதன் மீதோ, குழுவின் மீதோ ஒருவன் கொண்ட மனப்பாண்மைகள் நிலைத்திருக்காமல் மாற்றம் அடையலாம் இவையே உளமுரண்பாடுகளுக்கு காரணமாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக வெறுப்புகள், பிழையான எண்ணங்கள் ஆகியவை நனவிலி நிலையில் இருந்து கொண்டு நடத்தைகளை மிகுதியாகப் பாதிக்கின்றன. மேலும் மனப்பாண்மைகள் உளவியல் இயங்கு முறைகளான புலகாட்சி கற்றல் போன்றவற்றில் ஆதிக்கம் செலுத்துவனவாக உள்ளன. மனப்பாங்கு ஒவ்வொருவரும் வாழும் சூழல், காணும் காட்சி செய்யும் தொழில்களுக்கு ஏற்ப மாறுபடும் தன்மையும் உள்ளது.

ஒருவர் சாதாரண மனிதராக இன்னொருவருடன் தொடர்பை ஏற்படுத்தும் பொழுது மனப்பாங்கில் தன்னுடன் ஒத்த தன்மையில் உள்ளவருடனேயே தொடர்புகளை ஏற்படுத்துவார். இது ஓர் உளவியல் சார்ந்த செயற்பாடாகக் கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மைகள் மனிதரிடம் சில பழக்க வழக்கங்களைத் தடை செய்யும் காரணிகளாகவும் உள்ளன. பிறப்பால் உருவாவதில்லை. ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கைப் போக்கில் பெற்றோருடன், தம்முடன் ஒத்த குழுவினருடன் மற்றயோருடனும் கொள்கின்ற தொடர்பாடலும், அனுபவத்தாலும் பெறுகின்ற படிப்பினைகளின் வாயிலாகத் தாங்களாகவே சில மனப்பான்மைகளை உருவாக்கியும் கொள்கின்றனர். சிலருக்கு வேறொருவர் மூலமாகவும் மனப்பாங்குகள் உருவாக்கப்படலாம். கூடியவரையில் மனப்பாங்குகள் வாழ்நாள் முழுவதும் ஓரளவிற்கு மாறாமல் இருக்கும்.

ஆனால் சில அனுபவங்களால் இவை மாற்றப்படலாம். ஒருவரது மனப்பான்மைகளை வெளியிடுகின்ற செயல்கள், பாவனைகள் நடத்தைகள், உரையாடல்கள் போன்றவற்றின் வாயிலாக மறைமுகமாகத் தெரிந்து கொள்ளுதல் இயலாது மேலும் ஒருவரின் மனப்பான்மைகளை அவர் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் போது அல்லது சமூகத்தொடர்பு கொள்ளும் போது அறந்து வைகப்படுத்தலாம் மனப்பாங்குகளை வேறுபடுத்திப்பார்க்கும் பொழுது மனதளவில் இணைக்கின்ற, பிரிவினைகளை உண்டாக்கும், தடுப்பது தாழ்வு மனப்பான்மை, உயர்வு மனப்பான்மைகள் என்றும் பிரிக்கலாம். அச்சம், கூச்சம், நாணம் போன்றவை மனதளவிலே பிரிக்கிற நிலையிலும் பணிவு, வணங்குதல், பக்தி ஒரு நோக்கத்தை நிறைவேற்றுதில் உதவி போன்றவை தடுக்கிற நிலையிலும் நன்றியுடன் இருத்தல், நல்முறையில் செய்யவிரும்புதல், வழிபாடு போன்றவை இணைகின்ற நிலையிலும் தாழ்வு மனப்பாண்மைகளைக் குறிக்கும்.

அவமதிப்பு, சகிப்புத்தன்மை, தற்பெருமை போன்றவை பிரிகிற நிலையிலும் பெருமை, அரவணைப்பு, அமைதி, தற்கட்டுப்பாடு போன்றவை தடுக்கிற நிலையிலும் பரிதாபம், இரக்கம், பாதுகாக்கும் தன்மை போன்றவை தடுக்கின்ற நிலையிலும் உயர்வு மனப்பான்மைகளைக் குறிக்கும். வெறுப்பு, எதிர்ப்பு, ஆதாரமற்ற ஐயம் போன்றவை பிரிவினை நிலையிலும் பகைமை உணர்ச்சி, போட்டி, பொறாமை பேர்னறவை தடுக்கிற நிலையிலும். இரக்கம், விருப்பம், உண்மை, அன்பு நட்பு, உதவி செய்தல் ஆகியவை, இணைகின்ற நிலையிலும், நடுநிலையுடைய மனப்பாண்மைகளைக் குறிக்கும்.

சமூக மயமாக்கப்படும் முறையில் தனிமனிதனின் சமூக மனப்பாண்மைகள் பெருபங்காற்றுகின்றன. ஒரு குழு, ஒரு நிலையம், ஒரு சமூக விளைவு போன்றவற்றின் மீது அமைக்கப்படும் மனப்பான்மைகள் நடுநிலைத்தன்மை வாய்ந்தவையாகவே இல்லாமல் துணையாக அல்லது எதிர்த்தன்மை வாய்ந்தனவாக இருக்கும். ஒவ்வொரு சமூகம் மற்றச் சமூகத்துடன் கொண்டுள்ள நல்ல மனப்பான்மை ஒன்றுபட்டு வாழ வழிவகுக்கிறது. உலகிலுள்ள ஒவ்வொரு நாடும், அரசும் அந்நாட்டிலுள்ள பல மக்களும் பல்வேறு சிக்கலைப்பறிய மக்களின் மனப்பான்மைகளை மாற்றுவதிலும் ஈடுபட்டுக்கொள்கிறது. மேலும் சமுதாயத்தின் தோற்றம்வளர்ச்சி, முன்னேற்றம் போன்றவை மக்களின் ஆர்வங்கள், மனப்பாண்மைகளைச் சார்ந்திருப்பதால் சமூக வாழ்க்கையில் அவற்றின் பங்கு தெளிவாகிறது. ஒருவரின் ஆர்வங்களே, மற்றவர்களுடன் சமூகத் தொடர்பு வைத்துக் கொள்வதை முடிவு செய்கிறது. பொதுவான ஆர்வங்கள் இருப்பதால்தான் சமுதாயம் நிலைத்திருக்கிறது.

திருமதி புஸ்பலதா அன்ரனி
விரிவுரையாளர்,
தேசியக் கல்விக் கல்லூரி,
தாழங்குடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் குலத்திற்கான அந்தஸ்த்து

சாதாரண ஒரு மனிதனை முழுமை பெறச் செய்வது கல்வியாகும். அன்றிலிருந்து இன்று வரை அழியாச் சொத்தாகக் கருதப்படும் கல்வியானது ஒரு மனித வாழ்வின் வெற்றிக்கு இட்டுச்செல்கின்றது. என்பதில் எவருக்கும் ஐயம் இருக்கவே முடியாது. ஏனெனில் அன்னை பிதா இருவரையும் அடுத்தாற் போல் இருப்பது ‘‘குரு’’ ஆகும். இதுவரை பெற்றோரை அடுத்து கௌரவித்து மதிப்பளிக்கும் அந்தஸ்து ஆசிரியர் குலத்திற்கே உரியதாகும். இதற்காவே ‘‘மாதா, பிதா, குரு, தெய்வம்’’ என்றியம்புகின்றனர். தெய்வம் கூட ‘‘குரு’’ விற்கு அடுத்தபடியாகத்தான் நினைவு கூறப்படுகின்றது. இதிலிருந்து ஆசிரியரின் மகத்துவத்தை உணரக்கூடியதாக உள்ளது.

ஒரு குழந்தை பிறந்ததும் சிறு காலமே பெற்றோரின் அரவணைப்பில்வாழ்கின்றது. அவன் பிறந்தவுடனே கல்வியின் அடித்தளம் இடப்படுகின்றது. பெற்றோரிடமிலுருந்து பேசவும், நடக்கவும் க்றறுக் கொள்ளும் அக்குழந்தை, சில மணி நேரம் பெற்றோரை விட்டுப்பிரிந்து ஆசிரியரின் பொறுப்பிலும், கண்காணிப்பிலும் கல்வி ஊட்டப்படுகின்றது. இங்கு பெற்றோரின் அன்பினை விட்டும், மற்றோரை விட்டும் பிரிந்து வாழவும் கற்றுக் கொள்கின்றது. இதற்க ஆணி வேராக இருப்பது ஆசிரியரே ஆகும். பெற்றோரின் அன்பிற்கு ஈடாக வேறெவெரும் அன்பு செலத்த முடியா விடினும் ஓரளவு ஆசிரியரின் குணத்தாலும், பேச்சாலும் திருப்திப்படம் குழந்தை மற்றோரை மறந்து கல்வியின் பக்கம் திசை திருப்பப்படுகின்றது. இவ்விடத்தில் அன்பான ஆசிரியரின் சேவையே வேண்டப்படுகின்றது. மாறாகத் தீண்டிப் பேசும் ஆசிரியரின் கல்வியை விட்டும் அக்குழந்தை தூரமாகி விட வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆசிரியரின் வழிகாட்டலில் ஒரு மாணவன் மற்றவருடன் பேசவும், மதிப்பளிக்கவும் பழக்கப்படுகின்றான். அவலங்கள், சபைகளில் ஏனைய உத்தியோகத்தர்களுடன் நடந்து கொள்ளவும், மரியாதையுடன் பேசவும் புகட்டப்படுகின்றான். இதன் மூலமாக ஆசிரியர் கௌரவம் மட்டுமன்றி பெற்றோரின் அந்தஸ்தும் உயர்வடைகின்றது.

ஆசிரியர் எவரும் மாணவரிடம் இருந்து எதுவித பிரதிபலன்களையும் எதிர்பாராமல் பொதுநல நோக்குடன். கல்வியினை ஊட்டி வருகின்றனர். எதிர்காலத்தில் தனது மாணவன் தன்னை விட தலை சிறந்து விளங்க வேண்டும், சமூகத்தில் நல்லதொரு அந்தஸ்த்துடன் எல்லோரும் மதிக்கும் தலைவனாக வரவேண்டும். என்றே விரும்புகின்றனர். இதற்காகவே ஆசிரியர் இரவு-பகல், மழை-வெயில் என்றும் பாராமல் கல்வியூட்டி வருகின்றனர். இதற்காக எந்தவொரு ஆசிரியரும் தனக்கென கைங்கறியம் கிட்ட வேண்டும் என செயற்படுவதில்லை.

பிற்காலத்தில் உயர்நிலையில் ஒருவன் இருக்கின்றான் என்றால் அதற்கு காரணம் பெற்றோர்தான் என்று வெறுமெனே குறிப்பிட்டுவிட முடியாது. இதில் ஆசிரியரின் பங்கு நிறையவே இருக்கின்றது. எவ்வளவு பாரியளவு சொத்துக்கள் இருப்பினும் அதனைக் கையாள்வதற்கு நிர்வகிப்பதற்கும் நிச்சயம் கல்வயறிவு இங்கு அத்தியவசியமாகின்றது. இங்கு பொது நல நோக்குடன் கல்வியூட்டும் ஆசிரியரின் சேவை இன்றியமையாததொன்றாகும்.

ஒரு மாணவன் பிற்காலத்தில் பணிபரியும் அலுவலகத்திற்கோ அல்லது ஸ்தானத்திற்கோ விஜயம் செய்யும் ஆசிரியரைக் கண்டதும் எழுந்து நின்று அன்புடன் வரவேற்று முதலில் ஆசிரியரை அமர வைத்து தேவையான சேவைகளை வழங்குகின்றான். இவ்விடத்தில் ஆசிரியருக்கு கிடைத்த மரியாதையையும், மதிப்பையும் பார்த்து உள்ளம் பூரிப்படைகின்றது. ஆசிரியருக்கு இறுதிவரை கிடைக்கின்ற பிரதிபலன் இம்மரியாதை, மதிப்பு, கௌரவம் மட்டுமே. இதனை ஆசிரியரும் எதிர்பார்த்து தனது மாணவனை நினைத்துப் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். இந்த ஆசியுடன் மாணவனின் எதிர்காலம் மென்மேலும் விருத்தியும், சந்தோஷமும் கிடைக்கின்றது. இதனை நாமும் அடைய முயற்சி செய்வோமாக...........

**ஆக்கம்: M.M முஹம்மட் றிஸ்வான்**
(WE/BT/2010/P/M/45)
கமு / மழறுஸ்ஸம்ஸ்
மகா வித்தியாலயம்,
சாய்ந்தமருது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களில் சிறந்தவர் யார்?

தான் கல்வியைக் கற்று அதனை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுப்பவர்களே உங்களில் சிறந்த மனிதனாகும் என முஹம்மம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (அல்-ஹதீஸ்)

அல்லாஹ்வே அறிவின் அதிபதி. அவன் விரும்பியவருக்கு அறிவைக் கொடுக்கின்றான், தான் விரும்பியவரிடமிருந்து அறிவைத் திரும்பப் பெறுகின்றான். மனிதனுக்கு வழங்கப்பட்ட அறிவு மிகவும் சொற்பமேயன்றி வேறில்லை. அத்தகைய அறிவை விருத்தி செய்து தர வேண்டும் என்று நாம் பிரார்த்திக்குமாறு அல்லாஹ் எமக்கு கட்டளையிட்டுள்ளான்.

''என் இறைவா என்னடைய கல்வி ஞானத்தை அதிகப்படுத்துவாயாக!"
(அல்-குர்ஆன் 20:114)

''உங்களில் விசுவாசிகளுக்கும, கல்வி ஞானமுடையவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான்" (அல்-குர்ஆன் 58:11)

மேற்கூறிய அல்-குர்ஆனும், அல்-ஹதீஸும் கல்வி கற்றோர் சிறப்பையும், அதற்காக பிரார்த்தனை செய்ய வேண்டும் அத்துடன் கல்விக்காக உழைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது.

இந்நாட்டின் கல்வித் திட்டமும் அதற்கு அமைவாக மாணவர்கள் கல்வியைக் கற்றுக் கொள்ள அதிக பாடுள்ளது. விட்டை விட்டு பாடசாலைக்கு வருகின்றனர். அவர்கள் களிமண்ணைப் போன்று எல்லாத் துறைகளுக்கும் இசைவாக்கப்படுகின்றார்களா என்று கூறுகின்றனர். இவர்கள் கல்வியைக் கற்ற அறிஞர்கள், பல் துறை சார்ந்த மேதைகளாக மாற்றுகின்றனர்.

எனவே நாமும் முடியுமான அளவு அறிஞர்களாகவும் எமக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்களும் கல்விகற்க உதவி ......................

அல்-ஹாஜ் மௌலவி எம். ஏ. அப்துல் றஹீம்
கமு/அல்-பஹ்றிய்யா மகா வித்தியாலயம்,
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ம் நூற்றாண்டு எதிர்பார்க்கும் ஆசிரியர்

கற்றல் கற்பித்தல் செய்றபாட்டில் மாணவர், ஆசிரியர், வகப்பறை போன்றவை முக்கிய அம்சங்களாகும். எமது நாட்ல் கற்பித்தல் என்பது அனைவராலும் செய்யக் கூடிய ஒரு தொழில் ஒன்றே பெரும்பாலான மக்கள் நினைக்கின்றார்கள். அந்த அடிப்படையில் ஆசிரியத்தவத்தோடு இணைந்துள்ளவர்களால் ஒரு சிற தொகை மாணவர்களையாவது சமாளிக்க முடியுமோ இல்லையோ அல்லது அவர்களுக்கு கற்பிக்கத்தான் முடியுமோ என்பது ஆய்வுக்குரிய விடயமாகும். எமது பாடசாலை வாழ்வை மீட்டிப்பார்க்கும் போது ஒரு சில ஆசிரியர்களை இன்னும் அன்புடன் நினைவு கூறும் அதே வேளை நினைத்துக் கூடப்பார்க்க முடியாத சிலரும் இருக்கின்றார்கள். என்பது தெளிவாகும். இந்நிலைக்குரிய காரணி என்ன? ஏன் அவர்கள் அப்படி மனதில் இடம்பிடித்தனர்? போன்ற கேள்விகளுக்கு விடை காண்பது முக்கியமான விடயமாகும்.

''கற்பித்தல் என்பத தொழிநுட்பத்திறமை சேகரிப்போ; ஒருவர் கற்கக்கூடிய பொருட்கள் சிலவற்றின் சேர்கையோ அல்ல. திறமைகளும் தொழிநுட்பங்களும் முக்கியமான போதிலும் கற்பித்தல் என்பது இதனை விடவும் அதிகமானவற்றை அடக்கியுள்ளது. அனேக சந்தர்ப்பங்களில் திறன்கள் போன்றவற்றினூடாக கற்பித்தலின் சிக்கலான தன்மை குறைக்கப்படுகின்றது. கற்பித்தல் ஓர் ஒழுக்க நெறியாகும்.'' இக்கூற்றிலிருந்து கற்பித்தல் என்பது ஒரு எளிமையான செயலல்ல என்பதை அறிந்து கொள்வதுடன் அத திறன்கள், செய்தழறன்கள் அறநெறி போன்ற பண்புகளை அடக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி கற்கும் போதே சொற்களுக்கு மன் பொருள் என்ற பெஸ்ட்லாஜியின் கருத்தும், கற்றலில் ஹேர்பாட்டின் ஆயத்தம், எடுத்துக் கூறல், பொது விதி காணஎல், ஒப்பிடல், பயன்படுத்தல் என்ற 5 விதமான படிகளும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் என்பது உறுதி இதே போன்று கற்றல் என்பது ஆழ்ந்த, அன்ற முறையில் இடம்பெறல் வேண்டும். ஆழ்ந்து கற்றல் என்பது பாட நூலில் உள்ள அனைத்து கருத்துக்களையும் தெரிந்து கொள்வது. அகன்று கற்றல் என்பது செய்திகளை அறிதல், சொறிகளை மிகுதிப்படுத்தல், ஒன்றைக் கற்கின்ற போது அதில் கண் பாயவேண்டும். அப்பொழுதுதான் தடைகள், தவறுகள் இன்றி கற்க முடியும் என்பதாகும்.

பொதுவாக கற்றலின் காரணமாக எமது நடத்தையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. எப்பொழுது நடத்தையில் மாற்றங்கள் ஏற்படுகின்றனவோ அதுவே கற்றல் ஆகும். குறிப்பாக மனவளர்ச்சி ஒழுக்க வளர்ச்சி உணர்வுகளின் வளர்ச்சியைக் கொடுக்கக் கூடியதாக எதிர்காலத்தில் கற்றல் கற்பித்தல் அமைய வேண்டும்.

இவ்வகையில் 21ம் நூற்றாண்டு எதிர்பார்க்கும் ஆசிரியருக்குரிய திறன்கள் பின்வருமாறு:-

(01) திட்டமிடல் மட்டத்தில் இருக்க வேண்டிய கற்பித்தல் திறன்கள்
**Teaching skills at the planning stage:-**

1) கற்பித்தல் நோக்கங்களை எழுதுதல்.
2) உள்ளடக்கத்தை தெரிவு செய்தல்.
3) உள்ளடக்கத்தை ஒழுங்குபடுத்தல்.
4) கட்புல, செவிப்புல உதவிச்சாதனங்களை தெரிதலம் பயன்படுத்தலும்.

(02) அறிமுக மட்டத் திறன்கள்.
**Introductory stage skills**

1) மாணவரது மனதைத் தயார்படுத்தும் வகையில் அறிமுகத்தை உருவாக்கல்.
2) பாடத்தை அறிமுகப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(03) முன்வைத்தல் மட்டத்திறன்கள்

**Presentation stage skills**

1) வினாக் கொடுத்தல் :-

1-வகுப்பறை வனாக்களை வடிவமைத்தல்.
2-வினாக் கேட்பதில் சரளத்தன்மை.
3-வினாவை நன்றாகப் பரீட்சித்தல்.
4-வினாக் கொடுத்தலும் பகிர்நதளித்தலும்.
5-உயர் கட்டளை வினாக்கள்
6-விடைகளக்கரிய முகாமைத்துவம்

2) முன்வைத்தல்:-

1-பாடத்தின் வேகம்
2-விரிவுரைக் குழுச் செயற்பாடு
3-உபகரணங்களைக் கொண்டு வடிவமைத்தல்
4-செய்து காட்டல்
5-விளங்கப்படுத்தல்
6-கலந்துரையாடல்

3) கட்புல செவிப்புல துணைச்சாதனைப் பயன்பாடு:-

1-கற்பித்தல் துணைகளைப்பயன்படுத்தல்.
2-கரும்பலகையைப் பயன்படுத்தல்.
3-பற உருவப்படங்களைகப் பயன்படுத்தல்.
4-அமைதியும் சொறிகளற்ற நினைவுபடுத்தலும்.
5-மீளவலியுறுத்தல்.

4) முகாமைத்தவம்:-

1-மாணவர் உட்படுதலையும் கல்ந்து கொள்ளலையும் உயர்த்துதல்.
2-பங்கு பற்றல் நடத்தையை மீள ஓழுங்குபடத்தல்
3-வகப்பறை முகாமைத்துவம்.

(04) முடித்தல் மட்டத் திறன்கள்

**Closing stage Skills.**

1) மீண்டும் ஞாபகப் படுத்திப் பார்க்கக் கூடிய திட்டமிடல்
2) மாணவர் முன்னேற்றத்தை மதிப்பிடல்
3) மாணவரின் கற்றல் கற்றல் இடர்பாடுகளை கண்டறிந்து அதற்கிரிய மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4) ஒப்படைகளை வழங்குதல்.

**மேற்படி திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கு தேவையான அம்சங்கள் (Demands of Teacher)** வருமாறு:-

1) திறன் விருத்தி
2) அறிவு
3) வகிபாகங்கள்
4) நேர்பண்புகள்
5) நல்ல பழக்கங்கள்

திறன் விருத்தி

1) கற்பிக்கும் திறன்
2) தொடர்பாடல் திறன்
3) தொழிநுட்பத் திறன்
4) முகாமைத்துவத் திறன்
5) கல்வித் திறன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அறிவு

1) பாடவிதான மட்ட அறிவு
2) இணைப்பாட விதான அறிவ
3) பொது அறிவு

நேர்ப் பண்புகள்

1) ஆக்கத்திறன்
2) பொறுப்புக் கூறல்
3) இயைபாக்கம்
4) நியாயித்தல்
5) இணைந்து செயற்படல்
6) சார்பாக எடுக்கும் தன்மை
7) சுய கட்டுப்பாடு

நல்ல பழக்கங்கள்

1) நேரம் தவறாமை
2) ந்ல உணவுப்பழக்கம்
3) வாசிப்புப் பழக்கம்

வகிபாகங்கள்

1) வளப்படுத்துபவர் :- புதிய கற்பித்தல் நுட்பங்களை பயன்படுத்துவதன் ஊடாக; குழுச் செயற்பாடு, சுதந்திரக் கற்றல், ஆய்வும் கள அனுபவங்களும்.
2) வழிகாட்டி :- சரியான அனுபவத்தை தெரிவுசெய்வதில் மாணவர்களோடு இணைந்து வேலை செய்தல் விளங்கிக் கொள்ளல், ஆக்கத்திறனை ஊக்குவித்தல்.
3) வளவாளர் :- கல்வி, தொழில்சார் ஆலோசனைகளை வழிகளை வழங்கல்.
4) இணைந்து செய்படுபவர்:- ஆசிரியர், ஊழியர்கள், மாணவர்களும் ஏனைய கல்வி அதிகாரம் அளிப்பவர்களும்.
5) முகாமையாளர் :- மாணவர்களின் கற்றல், அனுபவர்களின் செல்வாக்கு, பல்வேறு வகையானவைகளின் முகாமை
6) அடையாளம் காண்பவர் :- மாணவர்களனின் கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தும் விடய்ஙகளை பகுத்தாய்பவர்.
7) மதிப்பீட்டாளர் :- தேர்ச்சிகளை நோக்கங்களை மதிப்பிடுபவர்.
8) குழு மனப்பாங்குள்ளவர்:- குழு உறுப்பினராக வேலை செய்தல் பொது நோக்கங்களினூடாக மாணவர்களின் கற்றல் விருத்திக்க உழைப்பவர்.
9) நேர்வழி காப்பவர் :- ஒவ்வொரு மாணவருக்கும் திட்டமிடலக்கும் வடிவமைத்தலுக்குமான வழிகாட்டல் வழங்கிகள்
10) முடிவை உருவாக்குபவர் :- மாற்றங்களை அமுலாக்கல், திட்டமிடல், நடத்தை சார் நோக்கங்களை தெரிவ செய்தில், நோக்கங்களை அமைத்துக் கொள்வதில் முடிவெடுப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய திறன்கள், தேவைகளை பின்னணியாகக் கொண்டு மாணவர்களிடம் பின்வரும் பண்புகளை வளர்க்கக் கூடியவர்களாக ஒவ்வொரு ஆசிரியரும் செயற்படல் வேண்டும்.

1) **உளம் சார்ந்தவை**
அன்பு, இனிமை, மன்னித்தல், செயல் தூய்மை பிறரை மதித்தல், திட நம்பிக்கை, இன்சொல் அனுமதி, பொறமை, பிரிவ, சகிப்புத் தன்மை சுயநலநின்மை, உணவுக்கட்டுப்பாடு.

2) **ஒழுக்கம் சார்ந்தவை**
உண்மையுடன் இருத்தல், அடக்கம் தன் செயற்பாடுகளில் ஒழுக்கம், நேர்மை, தூய்மை

3) **சமூகம் சார்ந்தவை**
பண்பாட்டை மதித்தல், பிறர் நம்பிக்கைகளை மதித்தல், தேசிய மரபினை மதித்தல்.

4) **அரசியல் பொருளாதாரம் சார்ந்தவை**
பொருளாதார அடிப்படையில் வேற்றுமை பாராட்டாமை, சமத்துவம், குடும்ப நெறி, சமூக நீதி அகிம்சை, அனைவரும் இணைந்து அமைதியாக வாழ நினைத்தல், தேசபற்று, பரந்த நோக்கு

5) **அறிவியல் சார்ந்தவை**
சோதித்து அறிதலில் ஆர்வம் பகுத்தாய்ந்து சரிபார்க்கும் பாங்கு, உண்மையைத் தேட விளைதல்.

6) **அழகணர்வு சார்ந்தவை**
இயற்கையை ரசித்தல், போற்றுதல் செயல்களை மகவும் நேர்த்தியாகச் செய்யும் பாங்கு.

மேலே கூறிய விடயங்களை கருத்தில் கொண்டு கற்பித்ததன் மூலம் 21ம் நூற்றாண்டு எதிர்பார்க்கும் ஒரு சிறந்த ஆசிரியராக திகழ முடியும்.

**A. Farook**
B.A (Hons)(S.L.) MATE (.S.L), PGDE, Cert in PD (IRE)
விரிவுரையாளர்
தேசிய கல்விக் கல்லூரி
அட்டாளச்சேனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக ஆசிரியர் தினமும் இன்றய நிலையும்

பாரம்பரிய சமுதாயத்தில் ஆசிரியர் சேவை இறை சேவையாகக் கருதப்பட்டது. குருகுலக் கல்வி முறையும், குரு-சீட மரபும் ஆசிரியருக்கிருந்த அந்தஸ்தை உயர்த்திக்காட்டியது. அரசு கல்விப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும் ஆசிரியர் அந்தஸ்து, கல்வி, சம்பளம், நலன்கள் அம்சங்களிலும் அதன் வழிகாட்டலும், கட்டப்பாடும் ஏற்படத் தொடங்கியது. அதன் எதிர் விளைவாக காலப்போக்கில் ஆசிரியர் சேவை தன் மதிப்பையும் இழக்கத் தொடங்கியது.

அரசு ஆசிரியர்களின் நலன்களில் போதிய அக்கறை எடுக்காமையும், அவர்கள் தம் சுய கௌரவத்தையும், கடமையையும் மதிக்கத்தவறியமையுமே ஆசிரியர்களின் ஆசிரியர்களின் இந்நிலைக்கு காரணங்களாகக் கொள்ளலாம். 19966இல் பரிசில் ''யுனெஸகோ'' வின் ஆதரவில் நடைபெற்ற 'ஆசிரியர் அந்தஸ்த்து' பற்றிய சர்தேச மாநாடு இத்தனையும் கருத்திற் கொண்டு விதம்புரைகளைத் தயாரித்து, இந்த விதம்புரைகள் 'ஆசிரியர் அந்தஸ்த்தினை' உயர்த்தும் ஒரு சாசனமாக அமைந்தது. யுனெஸ்கோவின் தீர்மானப்படி முதலாவது ஆசிரியர் தினம் 1991 ஒக்டோபர் 06ம் திகதி உலகெங்கும் கொண்டாடப்பட்டது. ஆசிரியர் தம் நிலையை உணரவும், சமூகத்திற்கு ஆசிரியரின் மதிப்பை உணர்த்தவும் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

பாரம்பரிய சமுதாயங்களில் ஆசிரியர்கள் உயர்ந்த அந்தஸ்துடன் மதிக்கப்பட்டனர். ''எழுத்தறிவித்தவன் இறைவன்'' மாதா, பிதாவுக்கு அடுத்து குரு வைக்கப்பட்டார். சமுதாயத்தின் தலைமைப் பொறுப்பு ஆசிரியரிடமே ஒப்படைக்கப்பட்டது. அறிவுக்கண்ணை விழிப்படையச் செய்யும் பணி உயர்வானது, பாடசாலையில் ஆசிரியர் கற்றலுக்கான வழிகாட்டி, பரீட்சகர், தன்னம்பிக்கையூட்டுபவர், பாதுகாவலர், ஆலோசகர், மாணவர் எதிர்காலத்திற்குப் பொருத்தமானவராக வடிவமைக்கும் சிற்பி என்பனவும் சமூகத்தில் அவர் பங்களிப்பு பலதரப்பட்டது. சமூக அபிவிருத்தியில் பங்காளி, பண்பாட்டாளர் சமூகத்தை வழிநடத்தும் தலைவன்.

இத்தகைய ஆசிரியரின் முதன்மை தற்காலத்தில் மேலும் அதிகரித்துள்ளது. ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அத்திவாரமான இளஞ்சிறாசின் கல்வி ஒழுக்கம் ஆகியவற்றிற்குப் பொறுப்பாக இருக்கும் அவர்கள் ஒரு முதலீடாகக் கணிக்கப்படுகின்றனர். இந்த அந்தஸ்த்து அரசு, அவர்களின் நலனில் காட்டும் அக்கறை மூலம் தெளிவாகின்றது. அவர்களின் வாண்மை விருத்திக்கு பல பல வாய்ப்புக்கள் இன்று வழங்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் சமூக அந்தஸ்த்தும் தார்மீகத் தலைமைத்துவமும் அவர்தம் தியாக மனப்பாங்கிலும், திடமான சேவையிலுமே தங்கியுள்ளது.

ஆசிரியர் இவ்வாறு அர்ப்பணிப்புடன் செயற்பட்டாலும் கூட இன்றய உலகில் ஆசிரிரை குறிப்பிட்ட குறிப்பிட்ட ஒரு சில பிரதேசங்ளே போற்றிப் பணிந்து, கௌரவிப்புடன் நடத்துகின்றன. அப்பிரதேசங்களில்தான் மாணவர்கள் நல்ல விழுமயங்களைத் தம் பெற்றோர், சமூகத்திடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரை மதிக்க மூத்தாரை கண்ணியப்படுத்தப் பழகுவதுடன், சிறந்த கல்வியை மதிப்புடன் பெற்றுக் கொள்கின்றனர், உயர்நிலையை அடைகின்றனர். ஆனால் இதற்கு மாற்றமாக வேறு சில பிரதேசங்கள் ஆசிரியர் சமூகத்தை தூற்றி, மதிப்புக் கொடுக்காது சிறு சிறு பிரச்சினைகளுக்கெல்லாம் மடித்துக்கட்டிக் கொண்டு இழித்துப் பேசுவதும், அந்நிலையில் மாணவர்களை கல்விகற்க அனுப்புவதும், தம் பெற்றோரிடமிருந்து கேட்டறிந்த இழி சொல்லுடன் மாணவர்கள் ஆசிரியர்களை ஏளனமாகப்பார்த்து, மதிக்காத நிலையும் காணப்படுகின்றது. இந்நிலையில் மாணவர்களிடத்தே நல்ல ஒழுக்க சீலப்பண்புகளையோ, சிறந்த நற்குணங்களையோ கட்டியெழுப்ப முடியாத இக்கட்டான நிலை ஏற்படும். இந்நிலை ஏற்பட்டால் மாணவர் கல்வியில் உயர்நிலையை அடைய முடியாத தன்மையையும், ஆசிரியர்களை ஏனோ தானோ என்ற மனநிலையில் செயற்பட தூண்டும் துர்பாக்கிய நிலையும் ஒருவாகும் என்பதில் ஐயப்பாடுகள் இல்லை.

மாணவர்களிடத்தே நல்ல விழுமியப்பண்புகள் இல்லாதொழிந்து போவதற்கு வலுச்சேர்த்த மற்றொரு முக்கிய காரணி யுனிசெப்பின் சிறுவர் உரிமைக்காப்பு. இக்காப்பீடானது நல்லதொரு வரவேற்கத்தக்க அம்சமாக இருப்பினும் கூட சிறுவர் உரிமை என்ற போர்வையில் இன்றைய மாணவர் சமூகத்திடமிருந்து மூத்தோரை மதிக்கும் ஆற்றலை, கௌரவிக்கும் பண்பை, பணிந்து நடக்கும் மனப்பாங்கை இல்லாதொழித்துள்ளது எனலாம்.

எனவேதான் சமூகங்கள் தங்களிடமுள்ள ஆசிரியர் சமூகத்தை என்றென்றும் போற்றிப் புகழ்ந்து, பணிந்து, காத்து நடப்போமாயின் எமது இளஞ்சிறார்களே நாளைய தலைவர்களாக, சிறந்த நற்பண்புள்ள பிரஜைகளாக, உலகம் போற்றும் அறிஞர்களாக, மானிடத்தன்மையுள்ளவர்களாக வழத்தெடுப்பதற்கு வழி கோலுவதாக அமையும்.

**Mr. M.B. பாயிஸ் Tr.**
ஆரம்ப நெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிளமைப் பருவத்தினரைக் கட்டுப்படுத்த முடியுமா

காத்திரமான கேள்விதான் பெற்றோரோ, ஆசிரியரோ, அயோச்சகரோ மிகவும் அக்கறை காண்பிக்க வேண்டிய ஒரு பள்ளிப் பருவம்தான் இந்த கட்டிளமைப் பருவம் - அதாவது 11-18 வயது வரையான வயதுப் பருவத்தினுள் இயல்பான வளர்ச்சிக்கு மாறாக சில மாற்றங்களை அதாவது உடலியல், உளவியல் மாற்றங்களை அவதானிக்க முடியும். எப்போது இப்பருவம் ஆரம்பித்து எப்போது இப்பருவம் முடியும் என்று வரையறை தெரியாது. ஆக 12-20 வயதுக்குள் அவரது பரம்பரை அடிப்படையில் வளாச்சி, முதிர்ச்சி என்பன இப்பருவத்தில் இடம்பெறும்.

கருவிலிருந்து வளர்ந்து வந்த பிள்ளைக்கு தனது கட்டிளமைப் பருவம் வரையிலாக ஏதோ ஒரு அடிப்படையில் பரம்பரையானது செல்வாக்குச் செலுத்தினாலும், சில சந்தர்ப்பங்களில் வாழும் சூழல் தலையீடு செய்வதை அவதானித்துக் கொள்ள முடியும். பொதுப்பாலருக்கும் வெட்க சுபாவம், தம்மைப்பற்றிய புற அழகு, ஆக்க உணர்வு, தண்டனை ஏற்றுக் கொள்ளாத நிலை, சமவயதுக்கூட்டம், பின்விளைவை எண்ணாத மனநிலை, முன்வரும் திறன் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளில் துரிதமாக செயற்படுவார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் ஒவ்வொருவரது வீடுகளிலும் இப்பருவத்தினால் ஏகப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு. இந்நிலையில் பெற்றோரின் அறியாமை, இதற்கு காரணமாகவும் அமையும் போது இவர்கரளைக் கட்டுப்படுத்தவே முடியாதா? என்ற கேள்விக்கு பெற்றோர் ஆளாகின்றனர்.

காதலித்தல், விவாகம், வீண் பிரச்சினைக்குத் தலை கொடுத்தல் தீவிர கட்டுப்பாட்டிற்கு அடிபணியாத தன்மை, சமூக செயற்பாடுகளுடன் பொருந்திப் போகாத நிலை தொழில் பற்றிய பிரச்சினைகள், மன எழுச்சி வேறுபாட்டுப் பிரச்சினை, தாழ்வுச்சிக்கல் போன்ற பலவகையான பிரச்சினைகளுக்கு இவர்கள் ஆளாகும் போது, இவர்கள் தொடர்பாக பெற்றோருக்குத்தான் தலைவலி. வழிகாட்டுவதில் ஆசிரியருக்கு இடர்பாடு இப்படிப்பட்ட நிலையில் இப்பரவத்தினரைக் கையாள்வது எப்படி? தேவைகளை நிறைவேற்றுவது எப்படி? நிறைவேற்றப்பட முடியாத தேவைகளை தெளிவுபடுத்துவது எப்படி? போன்ற நுட்பங்களைப் பெற்றோர் தெரிந்து வைப்பது அவசியம். நல்ல சூழலில் வாழும் இப்பருவத்தினருக்கும், முன்பிள்ளான சமூகத்தில் வாழும் இப்பருவத்தினருக்கும் இடையிலாக பல வேறுபாடுகள் உண்டு என்பதை பெற்றோர் அறிந்து

- தாம் வாழும் சூழலின் தன்மைக் கேற்ப, சந்தர்ப்பங்களுக்கேற்ப தகுதியான சூழலைத் தெரிவு செய்து வாழ வழிவகுக்கலாம்.
- பிள்ளைக்கு நல்ல நண்பனை இனங்காட்ட வேண்டும்.
- பெற்றோரும், ஆசியரும் இப்பருவத்தினரோடு நண்பராகவும், அன்பராகவும் பழகுவதன் மூலம்டி நல்வழிப்படுத்த வாய்ப்புண்டு.
- சுய தேவைகளை முடிந்தளவு பூரணப்படுத்த வழிகோரவேண்டும். முடியாத விடத்து நம்பிகடகை வார்த்தைகள் மூலம் திசை திருப்ப முனைந்து பார்க்கலாம்.
- அவர்களது வளர்ச்சிப் பருவ உள நிலைகளை அறிந்து உறுதுணையாக இருக்க முயற்சிக்கலாம்.
- தீவர கட்டுப்பாடு, தண்டனை வழங்குவதைத் தவிர்ப்பதன் மூலம் நல்வழிப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உரிய நேரத்தில் கணிப்பை (பாராட்டை) வழங்கி உற்சாகப்படுத்தலாம்.
- சமவயது நணபனோடு பிள்ளையை ஒப்பிடாமல் அவன் சார்பாக சிந்திக்கலாம்.

போன்ற அத்தகை செயற்பாடுகளாலும் அவர்களை அவர்களை வழிப்படுத்தி சீர்திருத்தலாம். றலடவழிப்படுத்தவதன் மூலம் கட்டுப்படுத்த முடியாத போனாலும் அனுபவம் பெறும் வரை தவறான பாதைக்கு இட்டுந் நெல்லாது வளர்த்துக் கொள்ளலாம்

அது மட்டுமன்றி தாழ்வுச் சிக்கலுக்கு அடிமையான இப்பருவத்தினர் பல பிரதியீட்டு முறைகளான வன்செயல் நெறி வாழ்வை வெளிக்காட்டுவர். இப்படியான நிலையில் பெற்றோர் ஊடாக ஆசிரியரின் கைங்கரியம் வெளிப்படலாம். அதாவது விருப்பு, வெறுப்பிற்கேற்ப மகவெளிச்சி வெளிப்பாட்டுக்க சந்தர்ப்பம் வழங்கும் முகமாக சங்கீதம், நடனம், விளையாட்டுப்பயிற்சி போன்றவற்றில் ஈடுபடுத்தலாம்.

இவர்கள் பற்றிய எண்ணக்கருவை ''மாக்ரெட்மீட், ரூத் பெனடிக்ட்'' போன்ற மானிடவியலாளர்கள் புராதன பண்பாட்டு மக்களிடையே கட்டிளமைப்பருவம் தொடர்பாக ஆய்வு நடத்தி இப்பருவம் ''ஒரு நிலை மாறும் பருவம்'' எனும் கருத்தை முன் வைக்கிள்றனர்.

எவ்வாறான நிவை இருந்தாலும் இப்பருவத்தினரிடம் காணப்படும் மற்றுமொரு பாரிய பிரச்சினை தொழில் இது ஆசிரியரின் வழி காட்டலின் பேரில் சிறப்பாக வழிகாட்டப்பட்டால் மிகவும் பெறுமானம் உள்ளதாக அமையும் அந்த வகையில், தொழில் வழிகாட்டல்களை வழங்குவதுடனூடாகவும் நல்வழிப்படுத்த வாய்ப்புண்டு

ஆகவே இப்பருவத்தினரை ''முள்ளை முள்ளால் எடுப்பது'' போல் அவர்களாக பழகுவதால் கட்டுப்படுத்தல் எனும் மனப்பாங்கிலிருந்து மாறி நல்வழிப்படுத்த முடியும் எனும் முடீவுக்கு வந்து அவனைச் சூழவுள்ள வழிப்படுத்துனர்கள் செயற்படுவதே நன்று எனக் கொளவது தலை சிறந்தது.

செல்வி ஆரியவதி சுந்தரலிங்கம்
ஆரம்பக் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு சில சிந்தனைகள்ஃபடித்ததில் பிடித்தது

(01) 'எங்கும் நூலகம் திறக்கப்படுகின்றதோ
அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது.'
- சுவாமி விவேகானந்தர் -

(02) 'போர்க்களத்திலே பெறக்கூடிய சில
வெற்றிகளைக் கூட இழக்க சம்மதிப்பேன் - ஆனால்
காலம் வீணக்கப்படுவதை ஒரு போதும் சம்மதியேன்
-நெப்போலியன் -

(03) ' முயற்சிகள் தவறலாம் ஆனால் முயற்சிக்கத் தவறக்கூடாது'
- யாரோ -

(04) 'உன் சொற்களைக் கொண்டு
உன் உணர்ச்சிகள் மதிக்கப்படும்,
உன் உணர்ச்சிகளைக் கொண்டே
உன் செயல்கள் மதிக்கப்படும் - உன்
செயல்களைக் கொண்டே - உன்
வாழ்க்கை மதிக்கப்படும.'
- சோக்கிரடீஸ் -

(06) 'தன்னைத் தானே சீர்திருத்திக் கொள்பவன்
அதன் மூலம் பிறரை சீர்திருத்த பெரிதும் உதவுவான்.
- தோமஸ் அடம்ஸ் -

(07) 'நூல்கள் நிறைந்த குடிசை மாடிக்கு சமமானது'
'தன்னை அடக்கப் பழகிக் கொண்வன்
வெளியே உள்ள எதற்கும் வசப்பட மாட்டான்'

(08) 'ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது
பெருமையல்ல வீழ்ந்த போதெல்லாம்
எழுந்தான் என்பதே பெருமை'

(09) 'கட்டுப்பாட்டோடு வாழ்வதற்கு காலமெல்லாம் முயன்று கொண்டே இருக்க
வேண்டும் கட்டு மீறி நடக்க ஒரு கனம் போதும்'

(10) 'ஒரு நிமிடம் கோபப்படுகின்றவன்
60வினாடி மகிழ்ச்சியாக இருப்பதை இழக்கின்றான்.'

(11) 'எந்தவொரு மனிதனது வெற்றிக்கும்
கடின உழைப்பு, சோர்வில்லாத மனம், நல்ல விதி
இவை மூன்றும் வேண்டும்.'

**Miss Nagamuthu - Elanthirai**
TK/Thambiluvil Madya Maha Vid,
SO.S/F/132/(GROUP-2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வும் வாழ்த்தும்

பல வருட தொண்டருக்கு உதவிய
உதவி ஆசிரியர் நியமனமே...............

சேவை நோக்க எம்மை உறுதிப்படுத்த
முன்வந்த தேசிய கல்வி நிறுவனமே...............

அளவீட்டில் எம்மை அளவீடு செய்து
உளவியல் உளப்பகுப்பாய்வு செய்து
முகாமைத்துவத்தில் முகாமை செய்ய
இடம் ஒதுக்கித்தந்த தேசிய கல்விக் கல்லூரியே...........

எமது சேவை நாட்டிற்குத் தேவை என
உணர்ந்த அதிகாரிகளே............
சேவையை உறுதிப்படுத்த உறுதுணையாக
வழிகாட்டும் ஆசிரிய ஆலோசகர்களே.....................

வாழ்வுக்கு வழிகாட்டிய உங்களை வாழ்த்தும்
பயிற்சி ஆசிரியர்கள் சார்பில்...............

**திருமதி மலர்வேனி நவராஜா**
WE/RC/NRC/148
மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி,
மட்டக்களப்பு.

# உங்களுக்கு தெரியுமா?

- முதலைகளின் முதுகிலுள்ள செதில்களை வைத்து அதன் வயதைக் கண்டுபிடிக்க முடியும்.
- வெள்ளாடு பசுவை விட அதிகம் பால் தரும்.
- ஓநாய்கள் மணிக்கு 40 கீ.மீ ஓடக்கூடியவை.
- பாம்புக்கு கண் இமைகள்கிடையாது.
- முதலைகளால் தங்கள் நாக்கை அசைக்க முடியாது.
- மிகப் பெரிய வாயுள்ள விலங்கு நீர் யானை.
- கொரில்லாக்கள் குரட்டை விடுவதில்லை.
- ஆண் குதிரைக்கு 40 பற்கள் காணப்படும்.
- நத்தை மணிக்கு பதினேழரை அடிகள் செல்கின்றது.
- டொல்பின் கண்களை திறந்தபடியே தூங்கும்.
- ஒட்டகங்களை விட அதிக காலம் தண்ணீர் இல்லாமல் வல்லமை எலிக்கு உண்டு

**எம்.ரீ. றமீஸா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி நாட்களை மீட்டித் தரும் பயிற்சிநெறி

கனதியான மனதுடன்
கண்களை நீரில் மிதக்க வைத்த எம்
கல்லூரி வாழ்வை,
மறுபடியும் ஞாபகமூட்டும்
பயிற்சிக்கலாசாலை
திருக்கோவில் இருந்து
மட்டுநகர் செல்லும்
பேரூந்துக்கள் சொவ்வி நிற்கும்
எங்கள் பெயர்களை
'பயணங்கள் முடிவதில்லை'
உள்மனம் ஆர்பரிக்கும்.

ஆசிரியத் தொழிலுக்கு
வாண்மையே அச்சாணி எக்பதாக
வழங்கினர் பயிற்சிதனை
தேசியக் கல்வி நிறுவகத்தார்.
புன்முறுவலுடன், கண்டிப்பும்
கலந்த பீடாதிபதி பாக்கியராசா ஐயாவுடன்
இணைந்த தோழன் உப பீடாதிபதி
துரைராசா சேர் கொண்டது
தாழங்குடா
பயிற்சி நிலையம்..

கல்வி உளவியலுடன்,
பாடசாலை முகாமைத்துவம்
அளவீடு, மதிப்பீடு பாடநெறிகளுடன்
பறந்தது ஒரு வருடம்.
விரிவுரைகளில் தவறாது
வந்து போகும் குட்டித்தூக்கம்
சிங்காரத் தமிழில் சிறப்பான விரவுரைகள்
ஆற்றுப்படுத்தும் அப்பொழுதுகளைப்
பொன் என்றால் பொய்த்திடுமா?

நெஞ்சிருக்கும் கல்விருக்கை
நிழல்விரிக்கும் முந்திரித் தோப்பு
மனதுக்கு மகிழ்ச்சி தரும்
மரக்கறித் தோட்டம்
உணவுகளை மட்டுமன்றி
பல்லின உணர்வுகளையும்
பரிமாறிக் கொண்ட
சிற்றுண்டிச்சாலை
ஜாதிமத போதமற்று இமாலய சொந்தங்களாய்
நண்பர்கள்
இன்னும் இன்னும்

அனைத்தையும் ஆழ்மனப்
பதிவுகளாக்கி விட்டு
வாண்மையுள்ள ஆசானாய்
வானுயர்ந்து நிற்போம்
கோபுர கலசங்களாய்
ஒளிரும் சிற்பங்களாய்
வருங்கால சந்ததியை
வடிவமைப்போம்

**By. Miss. N. Elanthirai (Group II)**
TK/Thambiluvil M.M.Vid
Tambiluvil
(SOS/F/132)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜத்தின் மீது சாட்சியாக

நீடித்த வாழ்வின்
நிலைத்திருந்த
நிஜத்தின் மீது
சாட்சியாக
நான்
ஆசிரியராக
அதன் பின்
பெற்ற பயிற்சிகள்
அத்தனையும்
புதுமையே!

பொய்த்துப்போன
கனவுமாதிரி...
கனத்துக் கொண்டே
இருக்கும்;
எனது இதயம்
மறக்க முடியாத
அந்த
தேசிய
கல்வி
நிறுவகத்தை
நினைத்துக் கொண்டே
இன்னும் இருக்கிறது.

புல்லின் மீது
படரும்
பனித்துளி முகங்கள்
சேர்ந்தே இருந்து...
பிரியும்
பிரிவு
பெருத்த காயமாய்
என்னுள் வலிக்கிறது.

நீடித்த வாழ்வின்
நிலைத்திருந்த
நிஜத்தின் மீது
சாட்சியாக
நான்
ஆசிரியராக
அதன் பின்
பெற்ற பயிற்சிகள்
அத்தனையும்
புதுமையே!

எம்.கே. இர்ஷாத் கான்
GROUP III



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டருக்குத் தொண்டன்

1. சந்திவெளியைப் பிறப்பிடமாய்
கொண்டவனே!
சனத்தை முன்னேற்றும்
வல்லவனே நந்தா!

2. நிரந்தர நியமனம் பெற்றுத்தர
போராடினாய்,
நிரந்தரமாய் எம்மை
விட்டுப்பிரிந்தாயே - நந்தா!

3. எவரிடமுமே பயமின்றிப்
பேசுவாய்
எக்காரியத்திலும் முன்
நிற்பாய் - நந்தா!

4. கருமை நிறமானவனே - காரியத்தில்
கண்ணாளனே - நந்தா!
குடும்பம் தனையே - மறந்தாயே
தொண்டர் எம்மையே - கண்முன்
வைத்தாயே - நந்தா!

5. நிகழ்வுகள் பல தந்தாயே - என்றும்
எம் நினைவில் நிற்பாயே - நந்தா!
எம் நிவைில் நிற்பாயே

**(எம்மை விட்டுப் பிரிந்த தொண்டராசிரியர் தலைவர் பரசுராமன் நந்தகுமார் அவர்களுக்கு சமர்ப்பணம்)**

ஆசிரியை
**பா. எட்வேட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றுமையின் சின்னங்கள்

எங்கிருந்தோ வந்தோம் - இங்கு
ஒன்றாய் வாழ்கின்றோம்!
ஏழை எழியவர் என்று பாராமல்
பழகினோம் - நாம்
கல்விக் கல்லூரியிலே
பாடிப்பழகினோம்

சாதி மதங்களை
ஒளித்து வாழ்கின்றோம் - நாம்
சாதனை படைப்பதற்காய்
சமாதானம் நிலைக்க
வேண்டுமென்று
வேண்டுகின்றோம் - நாம்

நவீன யுகம் தேடுகின்றது
நன்மை பயப்பதற்கு
ஓடைக்கரையில் ஓடமாய்
வாழ்ந்தோம் - நாம்
ஒற்றுமையின் சின்னமாய்
எதிர்காலம் எம் கையில்
வருவதற்கும் வழி சொல்லுங்கள்
ஆசான்களாகிய எங்களுக்கு

ஆரம்பக்கல்வி,
அல்/அக்ஸா மகாவித்தியாலயம்,
நற்பிட்டிமுனை.

## படித்துச் சுவைத்தது கற்றல்

நீங்கள் வாழ்வதால் கற்றுக் கொள்கிறீர்கள்...
நீங்கள் அன்பு செலுத்துவதால் கற்றுக் கொள்கிறீர்கள்...
நீங்கள் துன்பப்படுவதால் கற்றுக் கொள்கிறீர்கள்...
நீங்கள் மகிழ்வதால் கற்றுக் கொள்கிறீர்கள்...
நீங்கள் இழப்பதால் கற்றுக் கொள்கிறீர்கள்...
நீங்கள் வெற்றி பெறுவதால் கற்றுக் கொள்கிறீர்கள்...
நீங்கள் கேட்பதால் கற்றுக் கொள்கிறீர்கள்...
நீங்கள் பதிலளிப்பதால் கற்றுக் கொள்கிறீர்கள்...
நீங்கள் வாழ்வதால் கற்றுக் கொள்கிறீர்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்மறை உணர்வுகள்

மனிதர்களில் எதிர்மறை உணர்வுகள் காணப்படுவதற்கு காரணம் அவர்களது எதிர்மறையான சிந்தனைகளே. இந்த எதிர்மறை சிந்தனைகளாவன,

√ மறதி
√ தனிமை உணர்வு
√ தோல்வியைப்பற்றிய அச்சம்
√ வாழ்க்கையில் நம்பிக்கையின்மை
√ பிடிவாத குணம்
√ சூழ்நிலையால, சுற்றுப்புறத்தால் ஏற்படக்கூடிய எதிர்ப்பு உணர்வு
√ கட்டுக்கடங்கா கோபம்
√ சிந்தனைத் தட்டுப்பாடு
√ அடிக்கடி மாறும் மனோநிலை
√ முடிவெடுப்பதில் தடுமாற்றம்
√ ஒரு நிலைப்படுத்த இயலாத மனம்
√ பேராசை
√ அச்சம்
√ வெறுப்பு
√ பிறரோடு பழகுவதில் தயக்கம்
√ குறை கூறும் பழக்கம்
√ தப்பிக்கும் மனப்பான்மை
√ பொறுப்பின்மை
√ மன அழுத்தம்
√ திறமையின்மை
√ ஊக்கமிழப்பு
√ வெறிக்குணம்
√ ஏழனப்படுத்தும் தன்மை
√ சுய கௌரவமின்மை
√ பிறரை ஆதிக்கம் செய்யும் எண்ணம்
√ சந்தேகப்படுத்தல்
√ சுய உணர்வு இழத்தல்
√ பழைய நினைவுகளால் துயரமடைதல்
√ பிறரது எண்ணங்களால் பாதிக்கப்படும் பலவீனமான மனோ நிலை
√ சுயநலம்
√ தலைக்கணம்
√ பொறாமை
√ பணம், பொருள், பதவி மீதுள்ள அதீதப்பற்று
√ சுய இரக்கம்
√ அதீத தற்பெருமை
√ மனச் சோர்வு
√ மனதளவிலான கடும் பாதிப்புக்கள்
√ காரணமற்ற பயம்
√ வாழ்க்கை அனுபவங்கள் மூலம் கற்றுக் கொள்ளத் தவறுதல்.
√ நிலையின்மை
√ எதிர்காலம் பற்றிய குழப்பம்
√ உழைப்பின்மை
√ தெரியாதவை பற்றி அச்சம்
√ மனக் கட்டுப்பாட்டை இழந்துவிடுவமோ எனும் பயம்
√ மன உறுதியின்மை
√ சுவாரஸ்யம் இன்மை
√ எரிச்சல் படும் குணம்
√ சிறு சிக்கலைக் கூட பெரிது படுத்தும் தன்மை.
√ எதிர்க்கும் உணர்வு
√ தயக்கம்
√ பொறுமையான்மை
